# 11

# சிலுவை: அதன் உண்மைத்துவம்

எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார், அவர் எப்பொழுது ஜெபம் பண்ணினாலும், இயேசுவுக்காக தேவனிடம் நன்றி செலுத்தி, "எங்களுடைய பாவமன்னிப்புக்காக உண்மையிலேயே அவர் மரித்தாரே" என்று சொல்லுவார். அவர் சொல்லுவது சரியே: இயேசு - தேவனுடைய குமாரன்; தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் ராஜா; நம்முடைய இரட்சகர் - உண்மையாகவே நமது பாவமன்னிப்பிற்காக சிலுவையிலே மரித்தார். அவருடைய மரணம் நடந்தது உண்மை.

லூக்கா அந்த மரணத்தை (பகுதி) விவரித்து கீழ்வருமாறு எழுதுகிறார்:

> கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்த பொழுது, அங்கே அவரையும் அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள். அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டு சீட்டுப் போட்டார்கள். ஜனங்கள் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடனே கூட அதிகாரிகளும் அவரை இகழ்ந்து: இவன் மற்றவர்களை இரட்சித்தான், இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளட்டும் என்றார்கள். போர்ச்சேவகரும் அவரிடத்தில் சேர்ந்து அவருக்குக் காடியைக் கொடுத்து: நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக்கொள் என்று அவரைப் பரியாசம் பண்ணினார்கள். இவன் யூதருடைய ராஜா என்று, கிரேக்கு, லத்தீன், எபிரெயு எழுத்துக்களில் எழுதி, அவருக்கு மேலாக வைக்கப்பட்டது … .
>
> அப்பொழுது ஏறக்குறைய ஆறாம் மணி நேரமாயிருந்தது; ஒன்பதாம் மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. சூரியன் இருளடைந்தது. தேவாலயத்தின் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்தது. இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார் (லூக்கா 23:33-46).

"அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்." அந்த சிலுவையில் அறையப்பட்ட விதம் எப்படியிருந்தது. நமக்கு அது என்ன பொருளைக் கொடுக்கிறது? இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது நமக்கு என்ன செய்தார் என்று தெளிவாய்க் காண்பதே இந்தப் பாடத்தின் நோக்கம். சிலுவையின் வரலாறை ஐந்துபாகமாகப் பிரித்து ஒரு நாடகக் காட்சியைப்போல காண்போமாக.

## *காட்சி 1: கடைசி விருந்து*

*இயேசு தமது அப்போஸ்தலர்களில் இரண்டுபேரை அனுப்பி பஸ்கா விருந்தை ஒருவருடைய வீட்டில் ஆயத்தப்படுத்தும்படியாக இயேசு ஒழுங்கு செய்கிறார். அந்த விருந்தின் போது அவர் குனிந்து சீஷர்களின் கால்களைக் கழுவி, தாழ்மைக்கு ஒரு முன்னுதாரணத்தைக் காண்பித்தார். அப்பொழுது ஒரு நீண்ட விளக்கத்தை அவர் கொடுக்கிறார் (யோவான் 14-16ல் பதிவு செய்யப் பட்டுள்ளது). எப்படியாயினும், இதின் முக்கிய நிகழ்ச்சி அவர் நாம் அறிந்த "கர்த்தருடைய பந்தியை" ஸ்தாபிதம் பண்ணினார்.*

*இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, தமது சீஷர்களிடத்தில் கொடுத்து, "இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் என்னுடைய சரீரம்" என்றார் (லூக்கா 22:19). பிறகு அவர் பாத்திரத்தையும் எடுத்து, அதை ஆசீர்வதித்து, "இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" என்றார் (லூக்கா 22:20). மேலும் தொடர்ந்து அவர், "நீங்கள் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றார் (1 கொரிந்தியர் 11:25இ).*

*வருத்தம் தரும் இந்த பஸ்காவின் விருந்து விநோதமான காட்சியாக நகர்கிறது. எல்லா திசைகளிலிருந்தும் விரோதிகள் சூழ்ந்திருக்க, தமது அப்போஸ்தலர்கள் அவிசுவாசமாய் மாறிக் கொண்டிருப்பதை அறிந்தவராக, தாம் அறியாத குற்றத்துக்காக தமக்கு முன் நிற்கும் வேதனையான மரணத்தை கண்முன் கண்டவராக - இருந்தும் எதிர் வரும் சந்ததி தமது தலையாய பலியின் தேவையுடையவராயிருப்பதையே மனதில் எண்ணிக் கொண்டு இருக்கிறார் கிறிஸ்து. கர்த்தருடைய பந்தியின் ஸ்தாபிதம் ஒரு சுயநலமில்லாத செயல். சிலுவையின் நிழலிலே அது நிகழ்ந்ததை நினைவில் கொண்டு பாத்திரராய் அதில் பங்கு பெற வேண்டும் என்பதை மனதில் வைப்போமாக.*

*கர்த்தருடைய பந்தி மூன்று முக்கிய சத்தியங்களை நினைவுறுத்துகிறது: கிறிஸ்து நமக்காக மரித்தார்; நாம் பாவிகள்; மற்றும் கிறிஸ்து மறுபடியும் வருவதாக வாக்களித்துள்ளார். நாம் அதை மேலோட்டமாக எடுத்துக் கொள்வோமானால் தேவன் தாமே நம்மை மன்னிப்பாராக! அடுத்த முறை நீங்கள் பங்கு பெறும்போது, காயப்பட்ட தலையையும், இரத்தம் சிந்தும் கரங்களையும், துளையுண்ட விலை எலும்புகளையும், "இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய புது உடன்படிக்கையின் இரத்தமாயிருக்கிறது" (மத்தேயு 26:28) என்றும், "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றும் (லூக்கா 22:19) சொன்ன ஒரு இரட்சகரை மனக்கண்களில் காண்பீர்களாக. கர்த்தர் சிந்தின இரத்தத்தையும் பிட்கப்பட்ட சரீரத்தையும் அபாத்திரராய் பங்கு பெறுகிற எவரும் அவரை மறுபடியும் சிலுவையில் அறைகின்ற குற்றத்தைச் செய்கின்றனர். சிலுவையின் வெளிச்சத்தில் நாம் நம்மை சோதித்தறிந்து பந்தியிலே பங்கு பெற வேண்டும் (1 கொரிந்தியர் 11:27-29).*

## *காட்சி 2: தோட்டம்*

*பஸ்கா விருந்துக்குப்பிறகு, இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் கெத்செமனே தோட்டத்துக்குப் போனார்கள். தோட்டத்தின் நுழைவாயிலில் தமது அப்போஸ்தலர்களில் பெரும்பாலானோரை விட்டுவிட்டு, பேதுருவையும்,*

யோவானையும், யாக்கோபையும் இயேசு தம்மோடே கூட்டிக் கொண்டு, சற்று அப்புறம்போனார். பிறகு அவர்கள் தம்மோடு கூட விழித்திருக்கும்படி அறிவுரை கூறிவிட்டு அவர்களையும் விட்டு, தனிமையில் ஜெபிக்கும்படி சென்றார். மூன்று முறை அவர், "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால், நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபம் பண்ணினார் (மத்தேயு 26:39; காண்க வசனங்கள் 42, 44). மூன்று முறையும் தாம் நம்பியிருந்த மூன்று நண்பர்களும் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். கடைசியாக அவர் ஜெபித்து முடித்த போது, காட்டிக் கொடுத்தவனாகிய யூதாஸுடன் ஒரு கலகக்காரக் கும்பல் ஈட்டியோடும் பட்டயத்தோடும் வருவதைப் பார்த்தார். யூதாஸ் அவரை முத்தஞ்செய்து காட்டிக் கொடுத்தார்; பிறகு இயேசு அந்தக் கூட்டத்தாரோடு போய் விசாரிக்கப் படுகிறார், பிலாத்துவின் அரண்மனை விசாரணைக் கூட்டத்தில் விசாரிக்கப் பட்டபின், கொல்கொதாவுக்கு கொண்டு போகப்பட்டு, மரித்தார்.

காட்சி கடுமையான செயல்கள் நிறைந்து காணப்படுகிறது: இயேசுவின் ஜெபத்தில் இருந்த ஏக்கம், சீஷர்களின் பெலவீனம், நெருங்கிவரும் காட்சிக்குரிய மக்கள் கூட்டம், பக்தி பயமூட்டும் கர்த்தரின் பிரசன்னம், கிறிஸ்துவுக்காக பேதுரு அடித்த அடியும் அவரது ஆச்சரியப்படும் செயலும், யூதாஸின் உதடுகளிலிருந்து காட்டிக் கொடுக்கும் முத்தம், பிரதான ஆசாரியனின் அரண்மனைக்குப் போகும் ஊர்வலம், இயேசுவை "தூரத்தில் பின்பற்றின" போதிலும் தன்னை கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்று காட்டிக் கொள்வதில் பேதுருவின் தயக்கம் (மத்தேயு 26:58). எப்படியிருப்பினும், இந்த நிகழ்ச்சிகளினூடே நாம் வாசம்பண்ண நேரம் நமக்குத் தடையாக இருக்கிறது.

மாறாக கிறிஸ்துவின் ஜெபத்தை ஆராய்வோம்: "இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என தமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த பாடுகளினூடே செல்லாதபடிக்கு இயேசு யதார்த்தமாய் ஜெபித்தார். நாம் அவர் கெத்செமனேயில் இருந்த காட்சியையும் வேர்வை இரத்தத் துளிகளாய் பூமியில் விழுகிறதையும் காண்கிறோம். அதோடு அவருடைய இருதயத்தின் வலியை உணர்கிறோம், அவருடைய உணர்ச்சிகரமான அழுகையின் சத்தத்தை கேட்கிறோம். நாம் கேட்கும்படியாக ஒரு கேள்வி நம்முள் தூண்டப் படுகிறது, நாம் கேட்கிறோம், "தேவன் ஏன் அவருடைய ஜெபத்தைக் கேட்கவில்லை?"

அப்படியொரு வலிமிகுந்த மரணத்தில் அவர் ஏன் மரித்தார்? நமது ம னித ஆலோசனையின்படி மனிதவர்க்கத்திற்கு வேறு வழியில் இரட்சிப்பை அருளலாமே எனக் கேட்கலாம், தேவனுடைய திட்டம் மிகவும் தெளிவானது: நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக இயேசு மரிக்க வேண்டியிருந்தது. வேதம் இரத்தஞ் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்று சொல்லுகிறது (எபிரெயர் 9:22). ஆனால் மிருகபலியின் இரத்தம் பாவங்களை எடுத்துப்போட முடியாது என்றும் சொல்லுகிறது (எபிரெயர் 10:4). நமக்கு பாவம ன்னிப்பைக் கொடுக்கவல்ல ஒரே இரத்தம் கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே.

அது ஏன் அப்படி? இந்தக் கேள்விக்கு நாம் பதில் கொடுக்கமுடிந்தாலும் முடியாவிட்டாலும், வேதம் போதிக்கிறது, என்று நாம் சொல்லலாம்,

மற்றும் அதை நாம் நம்பலாம். இயேசு மரிக்க வேண்டியதிருந்தது. அவர் சிலுவைலிருக்கும்போது சிலர் அவரைப் பார்த்து, “இவன் மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளட்டும்” என்று இகழ்ந்தார்கள் (லூக்கா 23:35). அவர்கள் அவருக்கு தங்களை அறியாமலேயே குறிப்பிடத்தக்க புகழுரையைச் செலுத்தினார்கள். அவருடைய சத்துருக்களின் வாயிலிருந்து அவரை ஏற்றுக் கொள்ளும் வார்த்தைகள் வந்தன: “இவன் மற்றவர்களை இரட்சித்தான்.” அதற்குப் பின்பு அவர்கள் உட்கருத்தை விட்டு விட்டனர்: அவர் தம்மைத்தாமே இரட்சித்துக் கொண்டிருந்தால், அவர் மற்றவர்களை இரட்சித்திருக்க முடியாது!

நாம் இயேசு ஏன் மரிக்க வேண்டியிருந்தது என்று உறுதிப்பட சொல்லியிருக்க முடியாது, ஆகிலும் சிலுவை கூறும் இரண்டு சத்தியங்களை நாம் ஏற்றுக் கொள்ள முடியும். (1) *பாவத்தின் கொடுமையை சிலுவை வெளிப்படுத்துகிறது.* பாவம் எவ்வளவு மோசமானது? கிறிஸ்து மரிக்காமலிருந்திருந்தால், நமக்கு தெரிந்தே இருக்காது. பாவம் அழிக்கப்பட கிறிஸ்துவின் மரணத்தையே கோருகின்ற அளவுக்கு பயங்கரமானது. (2) *சிலுவை தேவனுடைய அன்பையும் வெளிப்படுத்துகிறது.* தேவன் நம்மிடத்தில் எவ்வளவாய் அன்புகூர்ந்தார்? அவர் நம்மை அபரித விதமாய் ஆசீர்வதித்திருந்தாலும், அது விளங்கப் பண்ணப்படாதிருந்தால் அவருடைய அன்பின் அளவை நாம் புரிந்து கொண்டிருந்திருக்க முடியாது: “நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப் பண்ணுகிறார்” (ரோமர் 5:8).

அதேபோல, கிறிஸ்துவை நாம் சிலுவையின் மேல் பாராதிருந்தால் அவருடைய அன்பின் பரிபூரணத்தை நாம் அறிந்திருக்க முடியாது. சிலுவையிலே கிறிஸ்து அறையப்படுவதற்கு முன், கசப்பு கலந்த காடி அவருக்கு வலி தெரியாமலிருக்கத் தக்கதாக குடிக்கக் கொடுத்தார்கள் (மத்தேயு 27:34). சிலுவையில் அறையப்படும் நபரை உணர்விழக்க வைத்து சிலுவையின் வலியை உணராதிருக்கச் செய்யும் பொருட்டு அது உதவியாயிருந்தது. இயேசு அந்தப் பானத்தை குடிக்க மறுத்து விட்டார், ஏனெனில் அந்தக் கொடூரமான மரணத்தின் வேதனை அனைத்தையும் அனுபவப்பட அவர் தீர்மானித்திருந்தார். கிறிஸ்துவின் அன்பு மயக்க மருந்தினாலே நிவாரணம் கிடைக்காத வலிமிகுந்த மரணத்திற்கு வழிநடத்திற்று.

## காட்சி 3: விசாரணைகள்

இயேசு தமது சத்துருக்களின் கையில் காட்டிக் கொடுக்கப்பட்டதிலிருந்து நமது நாடகக் காட்சி தொடர்கிறது. இந்த மூன்றாவது காட்சியில், மனித நடத்தைகளிலேயே இதுவரை பதிவு செய்யப்படாத வருத்தத்தின் உச்சக்கட்ட நிகழ்வுகளைக் காண்கிறோம்: யூதர்களின் (வெறிச்செயல்) வன்மம். அப்போஸ்தலர்களின் கோழைத்தனம், மற்றும் பிலாத்துவின் துரோகம்.

சிலுவையில் அறையப்படும் கடினமான பகுதிகளில் அவரை விசாரணை செய்த வரலாறு நமது மனதுக்குள் நேரடியாக வருகிறது. உண்மையாய் நடந்தவைகளை மறுதிருப்புதல் செய்து பார்ப்போமாக. இயேசு விசாரிக்கப்பட்ட காரியம் இரண்டு முக்கியப் பகுதிகளைக் கொண்டது. அவர் யூதர்களுக்கு முன்பாக விசாரிக்கப்பட்டு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டார், பிறகு ரோம

அதிகாரியின் முன்பாகவும் விசாரணைக்குட்படுத்தப் பட்டார்.

*யூதர்களின் விசாரணை.* யூதர்களுக்கு முன்பாக இயேசுவின் மூன்று கட்ட விசாரணை துவங்கி, அன்னா எனும் பிரதான ஆசாரியனாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நபருடைய வீட்டுக்குக் கொண்டு போகப்பட்டார். அங்கே இயேசு ஆக்கினைத்தீர்ப்பு அளிக்கப்பட்டார். பிறகு அந்த வருடத்து பிரதான ஆசாரியனாகிய காய்பா என்பவனின் வீட்டுக்கு கொண்டு போகப்பட்டார். அவருடைய விரோதிகள் அங்கே கூடியிருந்தார்கள், மறுபடியும் பொய்ச் சாட்சிக் காரர்களின் முரண்பட்ட குற்றச் சாட்டுக்களால் அவர் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டார். இந்த இரண்டு கட்ட விசாரணைகளும் அவர் கைதாகிப் பிடிக்கப்பட்டவுடனே நடுராத்திரியிலே நடந்திருக்க வேண்டும்.

இயேசு தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள் கட்டுவதாகச் சொன்னார் என்று குற்றஞ்சாட்டப்பட்டார். இதற்கு அவர் எந்த பதிலும் கொடுக்கவில்லை. பிறகு பிரதான ஆசாரியன் அவரிடத்தில், "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி … கேட்கிறேன்" என்றான் (மத்தேயு 26:63). இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, "நீர் சொன்னபடிதான்; அன்றியும் மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இது முதல் காண்பீர்களென்று, உங்களுக்கு சொல்லுகிறேன்" என்றார் (மத்தேயு 26:64). இந்த அறிக்கையினிமித்தம் இயேசு தேவதூஷணம் சொன்னதாக குற்றஞ் சாட்டப்பட்டார். அவருடைய விரோதிகள் அவர்மேல் துப்பி, பரியாசம் பண்ணி, அவரை அடித்து, விடிகிறவரையில் அவர்களின் விசாரணையில் விடப்பட்டார். இந்த அநேக மணிநேர விசாரணைகளுக்குடையே, அவர் பரியாசங்களுக்கும் இகழ்ச்சிகளுக்கும் உட்படுத்தப்பட்டார். அந்த இரவு பொழுதில் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு அலைகழிக்கப்பட்ட போது அப்போஸ்தலன் தம்மை மூன்றாம் முறை மறுதலித்த பேதுருவைப் பார்த்தார். பொழுது புலரும் போது, விசாரிக்கப் படவும், யூதர்களை ஆளும் செனகெரின் எனும் ஆலோசனை சங்கத்தால் அதிகாரப் பூர்வமான தீர்ப்பை வழங்கவும், அவர் கொண்டுபோகப்பட்டார்.

*ரோமரின் விசாரணை.* அவர் பிலாத்துவுக்கு முன்பாகக் கொண்டுபோகப்பட்ட போது, யூதேயாவிற்கான ரோம அரசின் தேசாதிபதியாகிய அவரால், இரண்டாம் கட்ட விசாரணை துவங்கியது. யூதர்கள் அவர்களின் அடிமைத்தன ஆட்சிக்கு உட்பட்டிருந்தபடியாலும், தாங்களாக குற்றவாளிகளை மரண ஆக்கினைக்கு உட்படுத்துகிற அதிகாரமற்றவர்களாயிருந்த படியினாலும் ரோம அதிகாரிகளுக்கு முன்பாக அவரைக் கொண்டு வரவேண்டியதாயிற்று. இந்த இரண்டாம் கட்ட இயேசுவின் விசாரணையும் கூட மூன்றுபடிகளைக் கொண்டிருந்தது.

பிலாத்து அவரை விசாரித்து தான் யாதொரு குற்றத்தையும் அவர்மேல் காணவில்லை. இயேசு கலிலேயாவைச் சேர்ந்தவர் என்று அறிந்து கொண்டதால், கலிலேயாவின் தேசாதிபதியாகிய ஏரோது அந்திப்பாவிடம், இயேசு அனுப்பப்பட்டார், அப்பொழுது அவன் எருசலேமில் இருந்தான். இயேசுவின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை விசாரிக்க அவன் மறுத்துவிட்டான். மாறாக, ஏரோதுவின் பொழுதுபோக்குக்காக இயேசு அற்புதம் செய்ய மறுத்ததால், ஏரோது தானே தன்னுடைய போர்சேவகருடன் சேர்ந்து வேடிக்கை காட்டி கிறிஸ்துவை பரியாசம் பண்ணினான். மீண்டும், பிலாத்துவினிடத்தில்

அனுப்பினான். இந்த குற்றச் சாட்டினிமித்தம் அவர்கள் ஒன்றுபட்டு, ஏரோதுவும் பிலாத்துவும் தங்களுக்குள் இருந்த பகையைவிட்டு சிநேகிதர்களானார்கள் (லூக்கா 23:12).

இயேசுவை மீண்டும் ஏற்றுக்கொண்ட பிலாத்து, கிறிஸ்துவை விடுதலை பண்ணுவதற்காக நம்பிக்கையற்ற நிலையிலும் மிகுந்த முயற்சிகளை எடுத்தான். இயேசுவை வாரினால் அடிப்பித்தால், அவருடைய விரோதிகளை அது திருப்திப்படுத்தக் கூடும் என்ற நம்பிக்கையில் அப்படி அடிக்கும்படி அவரை ஒப்புக்கொடுத்தான். அது அப்படி நடக்கவில்லை. பரபாசை விடுதலை செய்வதற்குப் பதிலாக இயேசுவை விடுதலை செய்தால், நன்கு அறியப்பட்ட ஒரு கொலைகாரனுக்குப் பதிலாக இயேசுவை பாதுகாக்க நிச்சயமாக யூதர்கள் சம்மதிப்பார்கள் என்று நினைத்தான். எதுவும் செய்ய இயலவில்லை. யூதர்கள் சத்தமிட்டு, "அவனைச் சிலுவையில் அறையவேண்டும்" என்றார்கள் (மத்தேயு 27:22, 23; மாற்கு 15:13, 14; லூக்கா 23:21). ஜனங்கள் இயேசுவின் இரத்தத்தை காண தீர்மானித்தார்கள். பிலாத்து அவர்களுடைய இரத்தத் தாகம் கொண்ட தீர்மானத்தைக் கண்டான்; யூதர்களின் வேண்டுகோளை நிராகரித்தால், அவர்கள் கலகம் பண்ணி தம்முடைய மேல் அதிகாரிகளிடத்தில் பிரச்சனை வந்துவிடக்கூடும், என்று பயந்தான். ஆகையால், அவர்கள் கோரியபடியே ஒப்புக் கொடுத்தான். அவன் அந்தக் காரியத்தையே கைகழுவி, இயேசுவை சிலுவையில் அறையும்படி ஒப்புக்கொடுத்தான்.

இந்த முழு சங்கதிகளும் இரவு முழுவதும் நடந்தது. இயேசு யூதர்களால் இருமுறை வேதனைப்படுத்தப்பட்டார்; பரியாசம் பண்ணப்படுவது மணிக்கணக்காக நீடித்துக்கொண்டே இருந்தது. அவர்கள் அவருடைய முகத்தில் துப்பினார்கள்; கன்னத்தில் அறைந்தார்கள்; கோலினால் அவரை அடித்தார்கள்; முஷ்டியினால் தலையில் குட்டி, கோலால் அடித்து துன்புறுத்தினார்கள்; அவருடைய முகத்தை மூடி; தலையில் குட்டி, பரியாசம் பண்ணி, "உன்னைக் குட்டினவன் யார்?" என்று கேட்டார்கள். பிலாத்துவின் போர்ச்சேவகர்கள் முள்ளினால் ஒரு கிரீடத்தை உண்டுபண்ணி, அவருடைய தலைமேல் வைத்தார்கள். அவர்களும், பரியாசம் பண்ணி, அவரைத் தலையின் மேல் தங்கள் முஷ்டிகளால் குட்டி, கடினமான கோலால் அடித்தார்கள். வேறெந்த வகையிலும் கொடுக்கப்படாத சரீர வேதனையை இயேசுவுக்கு கொடுத்தார்கள், பிறகு வாரினால் அடித்தார்கள்.

ஃபிரட்ரிக் W. ஃபரார் வாரினால் அடிப்பிக்கும் முறையை கீழ்வருமாறு விவரிக்கிறார்:

> சந்தோஷமற்ற பாடுகளுக்குட்படுத்தப்பட்டவர் வெளிப்படையாக பொது இடத்தில் அடிக்கப்படுவார், ஆடைகள் உரியப்பட்டு, கைகளை வளைவான முறையில் தூணோடு ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்படுவார், பிறகு, அவரது முதுகுவெளி திறந்த நிலையில், மிருகத்தின் தோலினால், ஒழுங்கற்று வெட்டப்பட்ட கூர்மையான எலும்புத் துண்டுகள் மற்றும் ஈயக்குண்டுகள் பொறுத்தப்பட்டு வெளியில் நீட்டிக் கொண்டிருக்கும் வகையில் பின்னப்பட்டிருக்கும்வாரினால் அடிக்கப்படுவார். சில வேளைகள் அடிதவறி விழுவதும் உண்டு - சிலவேளைகளில் வேண்டுமென்றே முகத்திலும் கண்களிலும் விழுவதுண்டு. அது மிகப் பயங்கரமானதாய்,

*சதையெல்லாம் கிழிக்கப்பட்ட ரண வேதனையில், பலியாக்கப்பட்ட நபர் மயக்கமுற்று பெரும்பாலும் மரித்துப்போவார்; இன்னும் அதிகமாய் ஒரு மனிதன் அவமானப்பட்டு நரம்பு தளர்ச்சியால் ஏற்படும் அனைத்து பெலனும் குன்றிப்போய் அழிவுக்குட்படுத்தும் செயலாக இது பெரும்பாலும் நிகழும்.*[1]

"இயேசு என்மீது அக்கறை கொண்டுள்ளாரா?" என்று எப்பொழுதெல்லாம் உங்களுக்கு கேட்கத் தோன்றுகிறதோ அப்பொழுதெல்லாம் உங்கள் மீது போதிய அக்கறை இருந்ததினால்தான் அப்படி வாரினால் அடிக்கப் பட்டதை சகித்துக் கொண்டிருந்தார் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்.

*கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது யார்?* இயேசு விசாரிக்கப்பட்ட பின், சிலுவையில் அறையப்படும்படி கொண்டுபோகப்பட்டார். அவருடைய விதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது யார்? அவருடைய விரோதிகளும் அவருடைய நண்பர்களுமாகிய இருசாராருமே.

அவருடைய விரோதிகள் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவர்கள், பொறாமையினாலே, தண்டனையை நிறைவேற்றுவோரிடம் அவரை ஒப்புக் கொடுத்தனர். அவர்கள் அவர் சொன்ன வார்த்தைகளில் இருந்த சத்தியத்தைச் சிந்திக்காமல் தங்கள் பாரம்பரியத்தை பற்றிக்கொள்வதை தெரிந்துகொண்டார்கள். இன்று சிலர் அதே வகையில் அவரை சிலுவையில் அறைகின்றனர், அவர்கள் அவருடைய வார்த்தைகளையும் அவரையும் புறந்தள்ளுவதன் மூலம் அப்படிச் செய்கின்றனர். அவர்கள் தங்கள் சொந்தக் கருத்துக்களில் மனிதனுடைய உபதேசங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதிலே விடாப்பிடியான பற்றுடையோராய் இருக்கிறார்கள்; அவருடைய (கிறிஸ்துவின்) உபதேசங்கள் அவர்களை கடிந்து கொள்ளக் கூடியவைகளாய் இருப்பதால் அவைகளை விட்டு வர மனமிருப்பதில்லை.

பிலாத்து கிறிஸ்துவை கைகளை கழுவியதன் மூலம் அவரைச் சிலுவையில் அறைந்தான். அவன் கழுவின பாத்திரத்திலிருந்து வந்த தண்ணீரின் சத்தம் நல்லொழுக்கத்தின் கோழைத்தனத்தை நினைத்துப் பார்க்கச் செய்யும் மனச்சாட்சியை சாந்தப்படுத்தும் பிசாசின் தந்திரம். அது அவனுடைய குற்றத்தை எடுத்துப் போடவில்லை. இன்று நடுநிலையாக இருந்துகொள்ள விரும்புகிறவர்களும் கர்த்தரை சிலுவையில் அறைகின்றனர். அவரை கண்டுகொள்ளாமலிருப்பதை தெரிவு செய்வோர், அவருடைய அழைப்பை ஏற்காமல் அவரைப் புறந்தள்ளி சிலுவையிலறைகின்றனர்.

இயேசுவின் நண்பர்களும் அவரை சிலுவையில் அறைந்தனர். யூதாஸ் முத்தத்தினாலே அவரைக் காட்டிக்கொடுத்தான்; பேதுரு சாபத்தினாலே அவரை மறுதலித்தான். யாருமே, அந்தக்கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் கூட, - இயேசு வெற்றிகரமாக எருசலேமில் நுழையும் போது, வாரத்தின் துவக்கத்தில் "ஓசன்னா!" என்று கூவிய கூட்டத்திலிருந்து ஒருவன் கூட வாரத்தின் - இறுதியில் அவரைக் குறித்து நல்வார்த்தை சொல்லவில்லை. அவரது நண்பர்களின் அமைதியினாலே இயேசு மரண ஆக்கினைக்கு உட்படுத்தப்பட்டார்! அவருடைய நண்பர்கள் இன்றைக்கும் அவரைச் சிலுவையில் அறைந்து கொண்டுள்ளார்கள். நாம் அவரை கைவிடுகிறோம், நாம் அவரை காட்டிக் கொடுக்கிறோம், நமது வாயின் வார்த்தைகளாலும் நமது ஜீவியத்தாலும் அவரை மறுதலிக்கிறோம். நாம் அவரை

முப்பது வெள்ளிகாசுக்கும் குறைவாக காட்டிக் கொடுக்கிறோம், கிறிஸ்துவுக்காக பேச வேண்டிய நேரத்தில் நாம் பேசாமல் அமைதியாயிருப்பதால் அப்படிச் செய்கிறோம்.

## காட்சி 4: சிலுவை

ரோம போர்சேவகர்கள் இயேசுவை "கொல்கொதா" எனும் மலைப்பகுதிக்கு கூட்டிக்கொண்டுபோய் அவரை சிலுவையில் ஆணியடித்தார்கள். அவரது வலதுபக்கமும் இடது பக்கமும் கள்ளர்கள் தொங்கினர். அவருடைய துணிகளைக் குறித்து போர்ச்சேவகர்கள் சீட்டுப்போட்டனர். அவரைக் கடந்துபோனவர்கள் அவரைப் பரியாசம் பண்ணினார்கள். அவருடைய நண்பர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். தெய்வீக பதிவேடுகளைப் பொறுத்தமட்டில், ஏழு வார்த்தைகளை இயேசு சிலுவையிலிருந்து பேசினார்:

1. அவரைச் சிலுவையிலே அறைந்தபொழுது, அவர் ஜெபிக்கையில், "பிதாவே, இவர்களை மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்" (லூக்கா 24:34) என்று ஜெபித்தார்.
2. கள்ளன் இராஜ்யத்தில் வரும்போது தன்னை நினைத்துக் கொள்ளும்படி கேட்டபோது. அவர் அவனுக்கு வாக்களித்து, "இன்று நீ என்னுடனே கூட பரதீஸில் இருப்பாய்" என்றார் (லூக்கா 23:43).
3. அவர் தமது தாயை யோவானிடத்தில் ஒப்புக்கொடுக்கும் போது அன்புடன் "ஸ்திரீயே, அதோ , உன்னுடைய மகன்!"; "இதோ உன் தாய்!" என்றார் (யோவான் 19:26, 27).
4. தேசத்திலே இருள் சூழ்ந்தபோது, அவர் அழுது, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்றார் (மத்தேயு 27:46; மாற்கு 15:34).
5. மரணம் நெருங்கிவரும் வேளையில், அவர் "நான் தாகமாயிருக்கிறேன்" (யோவான் 19:28). என்றார். கசப்புக்கலந்த காடி அவருக்குக் கொடுக்கப்பட்டது.
6. தமது மரணத்திற்கு சிறிது நேரத்துக்கு முன், அவர் "எல்லாம் முடிந்தது" என்றார் (யோவான் 19:30).
7. தமது கடைசி மூச்சை விடுகையில், அவர் அழுகையோடே "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று சொல்லி மரித்தார் (லூக்கா 23:46).

அற்புத நிகழ்வுகளால் இயேசுவின் மரணம் சுட்டிக்காட்டப்பட்டது. தேவாலயத்து திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது. பூமியதிர்ந்தது, கன்மலைகள் பிளவுண்டன. சிலுவையில் அறையப்படுவதற்கு பொறுப்பில் இருந்த நூற்றுக்கு அதிபதி ஆச்சரியப்பட்டு இருதயம் நெகிழ்ந்து, "மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன்" என்று சொன்னான் (மாற்கு 15:39).

சிலுவையறையப்பட்டவர்களின் மரணத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு போர்ச்சேவகர்கள் வந்தார்கள். இயேசு ஏற்கனவே மரித்துவிட்டதாகக் கண்டார்கள், ஒருமுறைக்கு இருமுறை உறுதிப்படுத்தும் பொருட்டு அவர்கள் அவருடைய விலா எலும்பில் ஈட்டியினாலே குத்தினார்கள், "உடனே இரத்தமும்

*தண்ணீரும் புறப்பட்டது" (யோவான் 19:34).*

*கிறிஸ்துவின் மரணத்தை இன்னும் சற்று கூர்ந்து கவனிப்போமாக. அவர் சிலுவையில் அறையப்பட்ட சம்பவம் பாவம் எவ்வளவு பயங்கரமானது என்பதையும், கிறிஸ்துவின் இரத்தம் எவ்வளவு அற்புதமானது என்பதையும் காண நமக்கு உதவி செய்ய வேண்டும். "எல்லாவற்றையும் அவர் எனக்காகச் செய்தார்" என்று நமக்குள் சொல்லிக் கொண்டு அவர் எல்லாவற்றையும் சகித்தார் என்று வாசிக்கிறபடி இயேசுவின் பாடுகளை மாத்திரம் நாம் பாராட்டக் கூடியவராக இருப்போம்.*

*சிலுவை மரணம் மெதுவாகவும் மிகுந்த வேதனையோடும் நடந்தது. கூடுதலாக அது மிகவும் கொடிய வலியைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. மேலும், அது பொது இடத்தில் திறந்த வெளியில் நடந்த சம்பவமானதால், சிலுவையறையப்பட்ட நபர் ஏறத்தாழ நிர்வாண நிலையில் இருக்கும்போது வெட்கத்தையும், எண்ணற்ற பூச்சிகளுக்கு சுலபமான ஒரு வேட்டையாடும் பொருளாக சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. ஆரம்பத்தில், இந்தத் தண்டனை முறை அடிமைகளுக்கும் புரட்சியாளர்களுக்கும் தான் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. கிறிஸ்துவின் நாட்களில் கூட, மிகவும் கீழ்த்தரமான குற்றவாளிகளே சிலுவையில் அறையப்பட்டனர்.*

*ஃபரார், தனது* கிறிஸ்துவின் ஜீவியம் *எனும் புத்தகத்தில், கீழ்வரும் வார்த்தைகளால் சிலுவையலறையப்படும் காட்சியின் நடைமுறையை விவரிக்கிறார்:*

> *சிலுவையில் அறையப்படுபவரை மிகுந்த சித்திரவதைக்கருவியான [சிலுவையின் மேல்] மல்லாக்காக கால்களை முழுமையாய் நீட்டி படுக்க வைப்பார்கள். அவருடைய கரங்களை விரித்து சிலுவையின் குறுக்கு கட்டைகளோடு இணைத்து வைப்பர்; பிறகு உள்ளங்கைகளை விவரித்துவைத்து, முதலில் வலது உள்ளங்கையின் மத்தியிலும், இரண்டாவதாக இடது உள்ளங்கையின் நடுவிலும், மிகுந்த கூர்மையுள்ள பெரிய ஆணியை வைத்து, கைகளினூடே துளைத்துக் கொண்டு போய் மரத்துடன் இறுக்கும்படி மரச் சுத்தியலால் அடிப்பார்கள், கை நசுங்கி, நரம்புகளினூடேயும் தசைகளினூடேயும் பிளந்துக் கொண்டு போகும்போது மிகுந்த வேதனையைக் கொடுக்கும். பிறகு, கால்களை முழுமையாக இழுத்து நீட்டிவைக்கப்படும்; மற்றுமொரு பெரிய ஆணியை பாதங்களின்மேல் பகுதியினூடே தனித்தனியாகவோ, அல்லது ஒன்றின் மேல் ஒன்றை வைத்தோ, நரம்புகளும் தசைகளும் துடிதுடிக்க, இரத்தம் ஒழுக ஒழுக [ஆணிகளை] அடித்து மரத்துடன் இறுக்குவார்கள். ...*
>
> *பிறகு சாபத்தீடான அந்த மரம் - எந்த வித ஆதாரமுமில்லாமல் உயிருள்ள மனிதனின் சரீரம் முழுவதும் தொங்கும் பொழுது அதன் பாரம் அழுத்துவதால் உண்டாகும் சரீர வேதனையும் பாடுகளும் மேலும் புதிய சித்திரவதையைக் கொடுக்கதக்கதாக கைகளிலும் கால்களிலும் துவாரம் அதிகமாகி - கொஞ்சம் கொஞ்சமாக மூச்சுத்திணறல் ஏற்பட பலமான கரங்களைக் கொண்டு சிலுவையை தூக்கி, அதற்கென வெட்டப்பட்ட குழியில் நிறுத்துவார்கள், சிலுவையின் கீழ்முனைப் பலமாக பொருத்தப்படும். பாதங்கள் பூமியிலிருந்து சிறிது*

> உயரத்தில் இருக்கும். பலியாக்கப்படும் நபரை அடிக்கவும் அவமானப் படுத்தவும் பகைமையை தீர்த்துக் கொள்ளவும் தக்கதாக கைக்கு எட்டும் தொலைவில் சரீரம் தொங்கிக் கொண்டிருக்கும். சுற்றிலும் நடமாடிக் கொண்டிருக்கும் கூட்டம் கொடுமைப்படுத்தவும், அட்டூழியமாக நடத்தவும், எல்லாவித வன்கொடுமைகளை நடப்பிக்கத்தக்கதாக மணிக்கணக்கில் அவர் சிலுவையில் தொங்கவிடப்படுவார், வருவோர் போவோரெல்லாம் முரட்டுத்தனமான இருதயத்தோடு உள்ளவர்களும் வன் கொடுமை புரிவதற்கு மாறாக, அந்த காட்சி அவர்கள் அழுது, இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்திருக்க வேண்டும் ... .
>
> சிலுவை மரணம் என்பது உண்மையில் எல்லாவித கொடூரமான வேதனைகளையும் கோரமான தோற்றத்தையும் உட்படுத்தும் மரணவலி - மயக்கம், தசைபிடிப்பு, தாகம், பசிபட்டினி, தூக்கக்கெடுதி, அடிபட்ட காயங்களால் உண்டாகும் காய்ச்சல் தசை இறுக்க நோய், வெளிப்படையான அவமானம், தொடர்ந்து நீண்ட நேர வாதையினால் ஏற்படும் வேதனை, எதிர்பார்த்த பயங்கரம், கண்மூடித்தனமான அடிகளால் உண்டான காயமும் அவமானமும், - இதற்குமேலும் தாங்கிக் கொள்ளவோ சகித்துக் கொள்ளவோ கூடாத அளவுக்கு உச்சக்கட்ட வன்கொடுமைகள், மயக்க முற்ற நிலையில் மட்டுமே சற்று விடுதலை உணர்வு உபத்திரவப் படுத்தப்பட்ட நபருக்குக் கிடைத்தது. இயல்புக்கு அப்பாற்பட்ட நிலையில் தொங்கியதால் ஒவ்வொரு அசைவும் கடுமையான வலியை ஏற்படுத்தியது; கிழித்து ரணமாக்கபட்ட நரம்புகள் ... வீக்கம் உண்டாக்கி, தசைகள் அழுகிப் போகிற நிலையிலிருந்தது; இரத்த நாளங்களின் பாதிப்பால் - குறிப்பாக தலையும் வயிறும் - இரத்த கட்டிகளாய் உறைந்துபோய் இருந்தது; இப்படி ஒவ்வொரு பரிதாபத்துக்குரிய நிகழ்வுகளும் பலவகையிலும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டிருக்கையில், அங்கே தாங்க வொண்ணா தீவிரமாகத் தகிக்கும் தாகம். ...[2]

கிறிஸ்துவின் மரணம் இப்படிப்பட்டதாயிருந்தது. அவர் உங்களுக்காக மரித்தார் என்பதை, மனதில் வையுங்கள்.

*சிலுவை உங்களுக்கும் எனக்கும் என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது?* முதலாவதாக, நமது பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமானால் சாத்தியமான ஒரே வழி இதுதான் என்பதை உணர வேண்டும். இரண்டாவதாக, கிறிஸ்துவின் மாபெரும் அன்புக்கும் நம்முடைய பாவ தன்மைக்கும் முன்பாக, பயபக்தியுடன் அது நம்மை நிற்கச் செய்யும். சிலுவையிலறையப்படும் காட்சி நமது தகுதியற்ற தன்மையினிமித்தம் நம்மை நடுங்க வைக்க வேண்டும். மூன்றாவதாக, சிலுவையலறையப்பட்ட காட்சி நம்மை முழுமையாய் கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கச் செய்யவேண்டும். இயேசு தம்மையே நமக்காக கொடுத்தார்; இப்போழுது நம்மை அவருக்கு ஒப்புக்கொடுக்கும்படி கேட்கிறார்.

## காட்சி 5: உயிர்த்தெழுதல்

இயேசுவின் மரணத்துடன் கதை முடியவில்லை. சிலுவையிலறையப் பட்டபின், மற்றொரு செயல் இன்னும் பார்க்க வேண்டியதாக இருந்தது; அது உயிர்த்தெழுதல். இயேசு சிலுவையிலறையப்பட்டதுடன் சிலுவையின் வரலாறு

*முடிவுறுமானால், அது எந்த விதத்திலும் பயனளிக்காத சோகக் காட்சியாக முடிந்திருக்கும் - நமது நம்பிக்கையை மூழ்கடிக்கும் மங்கிய மனக்கிலேசமான இரவாக அது போயிருக்கும். அது தோல்வியில் முடிந்த கதையாக இருந்திருக்கும். மாறாக இது ஒரு வெற்றிக் கதை! இயேசுவின் உயிர்த்தெழுந்த காட்சியில் தான் உச்சக்கட்ட வெற்றி வரலாறு காணப்படுகிறது. நாம் வாசிக்கிறோம்,*

> *ஒய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னலைப் போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள்போலானார்கள். தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: "நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரைவைத்த இடத்தை வந்து பாருங்கள்" (மத்தேயு 28:1-6).*

*அவருடைய உயிர்த்தெழுதலுடன் நம்மில் ஒவ்வொருவருக்கும் நம்பிக்கை வந்தது! நாம் எல்லாரும் கூட எழுப்பப்படுவோம்! நாம் கடந்தகால பாவங்களிலிருந்து எழுப்பப்படுவோம், கல்லறையிலிருந்து நாம் எழுப்பப்படுவோம், இறுதியாக நாம் பரலோகத்திற்குள் எழுப்பப்படுவோம்.*

*நாம் எழுப்பப்பட, நாம் தேவனிடத்தில் திரும்பி சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவால், அவரோடே கூட ஞானஸ்நானத்திலே அடக்கம் பண்ணப்பட்டு புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி தண்ணீரிலிருந்து அவரோடே எழுப்பப்பட்டவர்களாய் அவராலே இரட்சிக்கப்பட வேண்டும் (ரோமர் 6:3, 4).*

## *முடிவுரை*

*பூமிக்குரிய பிரச்சனைகளுக்கு சுவிசேஷம் எளிமையான நிவாரணத்தை அளிப்பதில்லை. நாம் அமைதியும், சமாதானமும் நிறைந்த சூழலில் வாழ வாக்களிக்கப் படவில்லை. தொல்லைகளில்லாத அமைதி நிறைந்த வாழ்வை அது உறுதியளிக்கவில்லை. மாறாக, அது சிலுவையைக் கொடுக்கிறது - சரீரம் பிளக்கப்பட்ட ஒரு மனுஷனை கொண்ட ஒரு சிலுவையை, கையிலே துவாரமும் விலாவிலே காயங்களும், ஆனால் அவருடைய இருதயத்திலே அன்பையும் அந்த மனிதனின் சிலுவை கொடுக்கிறது. அது இரத்தத்தையேயன்றி வேறெதையும் கொடுப்பதில்லை. அந்த இரத்தம் மிகமிக மோசமான மரணத்திலே நமக்காக சிந்தப்பட்டது.*

*எப்படியிருப்பினும், அந்த பலியே போதுமானது. இயேசுவின் இரத்தம் உங்கள் பாவங்களை சுத்திகரிக்க முடியும். உங்கள் வாழ்நாளெல்லாம் அவருடைய போதனைகளும் முன்னுதாரணமும் உதவிசெய்யக் கூடும், முடிவிலே இயேசு உங்களைத் தம்மோடே கூட நித்தியமான பரலோக வீட்டிற்கு*

கூட்டிச் செல்வார். இயேசு உங்களுக்காக மரித்தார். இயேசுவின் சத்தத்துக்கு செவிசாய்ப்பீர்களானால் பாவமன்னிப்பின் ஆசீர்வாதம் உங்களுடையது, சுத்திகரிக்க அவருக்குக் கீழ்ப்படியுங்கள்.

---

குறிப்புகள்

[1]Frederic W. Farrar, *The Life of Christ,* vol. 2 (New York: E. P. Dutton & Co., 1874), 379-80.
[2]Ibid., 497-99.